# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

(1998, நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, நவெம்பர் மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 38.00 தபாற் செலவு: ரூபா 8.75

**1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க,**
**உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்**

[1998 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.– ஓ. 13/98

**1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கச் சட்டத்தின் 8ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் –

(அ) அப்பந்தியின் (XXIV அ) என்னும் உட்பந்தியில் "1989 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1989 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1 ஆம் தேதி தொடங்கி, 1997 திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பந்தியின் (LXXIII) என்னும் உட்பந்தியில் "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அப்பந்தியின் (LXXIII) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(LXXIV) 1997 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, பண்டாரநாயக்க நூதன சாலைக் குழு (கூட்டிணைத்தல்) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட பண்டாரநாயக்க நூதன சாலைக்குழு" ;

"(LXXV) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப் பொருட்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புவிச்சரிதவியல் நில அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்.".

(2) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் —

"(ஊ) (i) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, 1996 திசெம்பர் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் இலாபங்களும் வருமானமும், அதாவது அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் எழுபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாமல் அவ்வரிமதிப்பீட்டாண்டின் இறுதியிலிருந்து ஓராண்டு முடிவடைவதற்கு முன்னர், அதன் கூறுவைத்திருப்பவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமாயின் ;

(ii) அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின், 22ஈஈஈஈ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏழு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி முடிவுறும் வரிமதிப்பீட்டாண்டின் கடைசி நாளை உடனடுத்து வரும் நாளன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான இலாபங்களும் வருமானமும் அதாவது அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் எழுபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாமல் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து ஓராண்டு முடிவுறுவதற்கு முன்னால் அதன் கூறு வைத்திருப்பவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமாயின் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (viii)ஆம் உட்பந்தியில் "ஜப்பான் கடல்கடந்த பொருளாதாரக் கூட்டுறவு நிதியம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஜப்பான் கடல்கடந்த பொருளாதாரக் கூட்டுநிதியம் அல்லது அதன் நிகழ்ச்சித் திட்டங்களில் இலங்கைக்குத் தொழில்நுட்பக் கூட்டுறவை வழங்கும் பொதுநலச் சமவாயச் செயலகம் ;". என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியில் "ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகம் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகம் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியில் "ஏதேனும் பணத்தொகையின் பாகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பணத் தொகையின் அத்தகைய பாகம் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ட) எவரேனும் ஊழியருக்கு, அத்தகைய ஊழியரின் தொழில்தருநரால் —

(i) ஆணையாளர் தலைமை — அதிபதியின் அபிப்பிராயப்படி அத்தகைய தொழில் தருநரால் தொழிலுக்கமர்த்தப்பட்ட எல்லா ஊழியர்களுக்கும் ஒரே சீராக ஏற்புடைத்தாகும் செயற்றிட்ட மொன்றிற் கிணங்க 1997 நவம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தன்னிச்சையான இளைப்பாறலின் விளைவாக ;

(ii) தொழில் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டமொன்றிற்கிணங்க 1997 நவெம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய தொழில்தருநரால் அத்தகைய ஊழியரின் ஆட்குறைப்பின் விளைவாக,

தொழிலின் ஏதேனும் பதவி இழப்பிற்கு நட்டஈடாக அத்தகைய ஊழியருக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகையொன்றாகச் செலுத்தப்படும் ஏதேனும் பணத்தொகை."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியில் "பணங்களின்மீது அவருக்குச் சேரும் வட்டியும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணங்களின் மீது அவருக்குச் சேரும் வட்டியும் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(எ) ஏதேனும் நிதி நிறுவனத்திற்கு, அதனால் அரசாங்கத்தின் ஏதேனும் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கெனத் தாபிக்கப்பட்ட ஏதேனும் முயற்சியுடைய மூலதனக் கம்பெனிக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் கடனின் வருவாய்கள் அத்தகைய கம்பெனியால் அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டிருப்பின், அத்தகைய கடனிலிருந்து திரளும் வட்டி.

இப்பந்தியின் நோக்கத்திற்கு "நிதி நிறுவனம்" என்பது எந்தக் கம்பெனியின் தொழில் அல்லது அதன் தொழிலின் ஒரு பாகம், தொகுதிக்கடன் அல்லது முறி என்ற வடிவத்தில் அல்லது வேறு ஏதேனும் வடிவத்தில் வைப்பீடுகள் அல்லது கடன் என்ற வகையில் பணத்தை ஏற்றுக் கொள்ளலும் அதன்மீதான வட்டிக் கொடுப்பனவும் அடங்கியுள்ளனவோ அந்தக் கம்பெனி என்று பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில் (அஅஅ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(அஅஅஅ) எந்தக் கம்பனியுடன் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையால் உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்பட்டுள்ளதோ அந்தக்

கம்பனியால், கட்டணம் செலுத்துவோரும் கட்டணம் செலுத்தாதவர்களுமான நோயாளர்களுக்கு உள்ளக மற்றும் வெளிநிலைச் சிகிச்சைக்கான வசதிகளைக் கொண்ட மருத்துவமனையொன்றின் தொழிற்பாடுகளிலிருந்து அத்தகைய மருத்துவமனைத் தொழிற்பாடுகளைத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டு தொடக்கம் கணிக்கப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப்பகுதியின்போது அத்தகைய ஏதேனும் கம்பனியின் இலாபங்களிலிருந்து செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம் ;

(அஅஅஅஅ) (i) எந்தக் கம்பனியுடன் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை தேசிய அரசப் பேரவைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையால் உடன்படிக்கையொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்தக் கம்பனியும், அத்துடன்

(ii) எந்தக் கம்பனிக்கு 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அகழ்வுரிமமொன்று அத்தகைய கம்பனியின் எவரேனும் பங்குதாரருக்குச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளதோ—

அந்தக் கம்பனியால், 3(அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள்ளான இலாபங்களிலிருந்து, அக்கம்பனியின் அத்தகைய எவ்விலாபங்களும், வருமானமும், உடன்படிக்கையில் குறித்துரைக்கப்

பட்டவாறு, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தேசிய அரசப் பேரவைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1998 ஆம் ஆண்டின் மாச்சு 19 ஆந் தேதியிடப்பட்ட 1019/13 ஆம் இலக்கமிடப்பட்ட கசெற்றில் வெளியிடப்பட்டுக் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் 2 ஆம் ஒழுங்குவிதியின் (iv) ஆம் பந்தியின் மேலுமான காப்புவாசகத்தின் (அ) என்னும் உட்பந்திக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய வீதங்களில் வருமானவரி விதிக்கப்படற்பாலதோ அந்தக் காலப்பகுதியின்போது அல்லது அதன் பின்னர் ஒரு வருடத்தினுள் அந்தக் கம்பனியால் அத்தகைய கம்பெனியின் எவரேனும் பங்குதாரருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம்.".

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "17ஓஓ, 18" என்னும் இலக்கங்களுக்கும் எழுத்துக்களுக்கும் பதிலாக, "17ஓஓ, 17ஔ, 17க, 18" என்னும் இலக்கங்களையும் எழுத்துக்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், அப்பந்தியின் (xxi) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :–

(xxii) எவரேனும் ஆளினால் எந்தக்கம்பனியின் பங்குகள் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுவால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில், அப்பங்குகள் 1999 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன் அவ்வாறு விலைகோரப் பட்டிருப்பின், விலைகோரப்படுகின்றனவோ அந்தக் கம்பனியாகிய ஏதேனும் கம்பனியில் வைத்திருக் கப்படும் ஏதேனும் பங்கு அவரால் 1997 நவெம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1999 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் விற்பனை செய்யப்படுமிடத்து, அவ்விற்பனையின்மீது,

(xxiii) ஏதேனும் கம்பனியால் வழங்கப்பட்டதும் அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்படுவதுமாகிய ஏதேனும் முறி, தொகுதிக்கடன் அல்லது வேறு கடன் சாதனம் அதாவது அதன் விற்பனையின் நேரத்தில் இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப் பட்ட ஏதேனும் அலுவலக முறையாக நிரலில் விலைகோரிப் பெறப்பட்ட முறி, தொகுதிக்கடன் சாதனம், 1997 நவெம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய ஆளினால் விற்பனை செய்யப்படுமிடத்து அவ்விற்பனையின் மீது ; ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (கக) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :—

"(கககு) மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எவரேனும் ஆளுக்கு தங்கத்தின், இரத்தினக்கற்களின் அல்லது ஆபரணத்தின் விற்பனையின்றெழும் இலாபங்களும் வருமானமும் ;

(2) அப்பந்தியின் (ய) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(யய) கம்பனியொன்றினால் வழங்கப்பட்டதும் அத்தகைய விற்பனையின் நேரத்தில் இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் விலைகோரப்பட்டது

மான அவரால் வைத்திருக்கப்படும் முறி, தொகுதிக்கடன் அல்லது வேறு கடன் சாதனமொன்றாக உள்ளதுமான ஏதேனும் முறியில், தொகுதிக் கடனில் அல்லது வேறு கடன் சாதனத்திலிருந்து 1997 நவெம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எவரேனும் ஆளினால் பெறப்பட்ட அல்லது அவருக்குத் தேறுகின்ற அல்லது திரளுகின்றதானதுமான 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட் பட்ட எவையேனும் இலாபங்களும் வருமானமும்." ;

(3) அப்பிரிவின் (ர) என்னும் பந்தியில் "லொத்தரிலிருந்து கிடைக்கும் இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "லொத்தரிலிருந்து கிடைக்கும் இலாபங்களும் வருமானமும் ; அந்து டன்" என்னும் சொற்களை இடுதவன் மூலம்.

(4) அப்பிரிவின் (ல) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் :—

"(வ) அரசாங்கத்தால் தாபிக்கப்பட்டு நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட வெண் தாமரை இயக்கத்தால் ஏதேனும் வர்த்தக வங்கியில் வைப்பிலிடப்பட்ட ஏதேனும் பணத்தொகையின்மீது வட்டி அல்லது கழிவு ஆகியனவாக, "வெண்தாமரை" இயக்கத்திற் குத் திரளும் ஏதேனும் வட்டி அல்லது கழிவு ;

(வவ) மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எவரேனும் முதனிலை வியாபாரிக்குக் கிடைக்கும் அல்லது திரளும் இலாபங் களினதும் வருமானத்தினதும் இயைபான பாகம்."

இப்பந்தியின் நோக்கங்களுக்கு –

(i) இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பிலும் எவரேனும் முதனிலை வியாபாரி தொடர்பிலும் "இயைபான பாகம்" என்னும் சொல்லமைப்பு பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டதும் அத்தகைய முதனிலை வியாபாரியால் வைத்திருக்கப் பட்டதுமான ஏதேனும் திறைசேரி உண்டியலில், திறைசேரி முறியில், பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதியில் அல்லது வேறு பிணையத்தில் இரண்டாம் நிலைச் சந்தையிலான வியாபாரத்திலிருந்து, அத்தகைய உண்டியல், முறி, பங்குத் தொகுதி அல்லது வேறு பிணையம் அத்தகைய முதனிலை வியாபாரியால் வைத்திருக் கப்படும் காலப்பகுதிக்கு ஏற்றிக்கூறப் படற்பாலதாகின்றவாறு அத்தகைய உண்டியல், முறி, பங்குத்தொகுதி அல்லது வேறு பிணையம் முதிர்ச்சி யடையும் வரை அத்தகைய உண்டியல், முறி, பங்குத்தொகுதி அல்லது வேறு பிணையம் அத்தகைய முதனிலை வியாபாரியால் வைத்திருக்கப்பட்டி ருப்பின் அல்லது உண்டியல், முறி, பங்குத்தொகுதி அல்லது வேறு பிணையம் தொடர்பில் திரண்டிருக்கக் கூடிய வட்டியின் அல்லது கழிவின் அத்தகைய பாகத்தை அத்தகைய இலாபங்களிலும் வருமானத்திலு மிருந்து கழிப்பனவு செய்த பின்னர் அத்தகைய முதனிலை வியாபாரியின் இலாபங்களும் வருமானமும் என்று பொருள்படும்.

(ii) "முதனிலை வியாபாரி" என்னும் சொல்லமைப்பு உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையால் நியமிக்கப் பட்டு அத்துடன் திறைசேரி உண்டியல்களில், திறைசேரி முறிகளில், பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதியில் அல்லது வேறு பிணையத்தில் முதனிலை வியாபாரியொருவராகச் செயற் படும் எவரேனும் நிதியாளர் அல்லது ஏதேனும் வங்கி என்று பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஒஓ என்னும் பிரிவைத் திருத்துதல்.

8. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஒஓ என்னும் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

"(ஆ) இப்பிரிவு ஏற்புடைத்தாகும் கம்பனியொன்றாக —

(i) 1998 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அதன்பொருட்டு 1997 திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பமொன்றின் மீது,

(ii) 2000, மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அதன் பொருட்டு 1997 திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 1999 திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அதன் பொருட்டு எழுத்தில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது

கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும் ;".

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஈ) அக்கம்பனியால் கொண்டுநடாத்தப்படும் பொறுப்பு முயற்சியின் பாவனைக்கென ஏதேனும் பொறித் தொகுதியின், பொறியின், இணைப்புகளின் அல்லது உபகரணத்தின் கொள்வனவில் நான்கு மில்லியன் ரூபாவுக்குக் குறையாமல்,

(i) பந்தி (ஆ) என்பதன் (i) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றின் விடயத்தில் 1998 திசெம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னரும் ; அத்துடன்

(ii) பந்தி (ஆ) என்பதன் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றின் விடயத்தில் 2000, திசெம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னரும்,

முதலீடு செய்திருப்பதும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஓஓ என்னும் பிரிவைத் திருத்துதல்.

9. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஓஓ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :

"(அ) இப்பிரிவு ஏற்புடைத்தாகும் பொறுப்பு முயற்சியொன்றாக ,

(i) 1997 திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் அதன் பொருட்டு எழுத்தில் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது 1998 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ; அல்லது

(ii) 1997 திசெம்பர் 31 ஆம் தேதியின் பின்னர் ஆனால் 1999, திசெம்பர் 31ஆம் தேதிக்கு முன்னர் அதன் பொருட்டு எழுத்தில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது 2000, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் –

கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும்" ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :–

"(ஆ) இயைபான தேதி என்பதன் சொல்லமைப்பு,–

(i) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்திக்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பில் 1996, நவெம்பருக்கு முந்தியதல்லாத. ஆனால் 1998, ஏப்பிறலுக்குப் பிந்தாத ஏதேனும் பஞ்சாங்க மாதத்தின் முதலாம் நாள் என்று பொருள்படும் ;

(ii) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் பந்திக்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பில் 1997, நவெம்பருக்கு முந்தியதல்லாத, ஆனால் 2000, ஏப்பிறலுக்குப் பிந்தாத ஏதேனும் பஞ்சாங்க மாதத்தின் முதலாவது நாள் என்று பொருள்படும்,

என்பதுடன், அத்தகைய பொறுப்பு முயற்சியினால் அத்தேதி தேர்ந்தெடுக்கப்பட்டதுமாதல் வேண்டுமென்பதுடன், அம்மாதத்தின் கடைசி நாளிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதலும் வேண்டும் :

ஆயினும் இயைபான தேதி ஆணையாளர்-தலைமையதிபதிக்கு அவ்வாறு அறிவிக்கப்படாதவிடத்து –

(i) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்திக்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பிலான இயைபான தேதி 1997. ஏப்பிறல் 1 ஆந் தேதியாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ii) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) உட்பந்திக்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பிலான இயைபான தேதி 1999. ஏப்பிறல் 1 ஆம் தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஔ. 17க என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**10**. பிரிவு 17ஓ என்பதன் முடிவில் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஔ. 17க என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

குறித்தசில சேவைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு.

17ஔ. மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள். குளிரூட்டப்பட்ட போக்குவரத்து அல்லது குளிரறைக் களஞ்சிய சேவைகளை அல்லது அதற்குத் துணையான வேறு சேவைகளை ஏற்பாடு செய்யும் எவரேனும் ஆளின் அல்லது பங்குடமையின் இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்ததான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) —

(அ) 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து ;அல்லது

(ஆ) அத்தகைய பொறுப்பு முயற்சித் தொழிலைக்கொண்டு நடாத்தத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து

அதாவது இவற்றுள் எது பிந்தியதோ அதிலிருந்து கணிப்பிடப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

பெருந்தோட்டத் துறை சாராத கமத்தொழிற் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பெனியின் இலாபங்களினதும் வருமானத்தினதும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு.

17க. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் வரும் ஏதேனும் கம்பெனியின் இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) 32 ஈஈஈஈ என்னும் பிரிவின் ஏற்பாடுகளில் முரணானது எது எப்படியிருப்பினும் —

(அ) 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து ; அல்லது

(ஆ) அத்தகைய கம்பனி தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து

அதாவது இதில் எது பிந்தியதோ அதிலிருந்து கணிப்பிடப்பட்ட பத்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஏதேனும் கம்பனி தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியானது, அத்தகைய கம்பனியால் கொண்டு நடாத்தப்படுவதும் —

(அ) தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றைத் தவிர எத்தகைய விவரணத்தினதுமான செடிகளைக் கொண்ட காணியில் பயிர்செய்வதில் ; அல்லது

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட பயிர்ச்செய்கைக்கு உயர்தரத்தினவாக கமத்தொழிற் திணைக்களத்தால் சான்றுபடுத்தப்பட்ட நடுகைப்பொருட்களின் உற்பத்தியில் ; அல்லது

(இ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட காணியில் பயிர்ச் செய்கைக்காக நடுகைப் பொருட்களின் தரத்தையும் தன்மையையும் மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்வதில்

ஈடுபட்டுள்ளதுமான பொறுப்பு முயற்சியொன்று" என்று பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 20ஈ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20இ என்னும் பிரிவின் முடிவில் இத்தால் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஈ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"பசுமைமாறாத அல்லது பதனிடப்பட்ட காய்கறிகளை அல்லது பழங்களை ஏற்றுமதி செய்வதும் அத்துடன் காய்கறிகளை அல்லது பழங்களைப் பயிரிடுவதுமான கம்பனியொன்றின் இலாபங்களினதும் வருமானத்தினதும் வருமான வரியில் இருந்து விலக்களிப்பு.

20ஈ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் வரும் ஏதேனும் கம்பனியின் இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களைத் தவிர) அத்தியாயம் VIIIஅ என்பதில் முரணானது எது எவ்வாறிருப்பினும் —

(அ) 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து ; அல்லது

(ஆ) அத்தகைய பொறுப்பு முயற்சித் தொழிலைக்கொண்டு நடாத்தத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து

அதாவது இதில் எது பிந்தியதோ அதிலிருந்து கணிப்பிடப்பட்ட பத்த ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.".

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, ஏதேனும் கம்பனி தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "குறித்துரைக் கப்பட்ட பொறுப்பு முயற்சி" என்பது அக்கம் பனியால் கொண்டு நடாத்தப்படுவதும்—

(i) எவையேனும் பசுமை மாறாத அல்லது பதனிடப்பட்ட காய்கறிகளின் அல்லது பழங்களின் ஏற்றுமதியிலும் ; அத்துடன்

(ii) அந்த வரிமதிப்பீட்டாண்டில், பரப்பள வில் ஐந்து ஏக்கர்களுக்குக் குறையாத காணியில் காய்கறிகளின் அல்லது பழங்களின் பயிர்ச்செய்கையில்

ஈடுபட்டுள்ளதுமான ஒரு பொறுப்பு முயற்சி என்று பொருள்படும்.

இப்பிரிவில் காய்கறிகள் என்பது, வெற்றிலை யையும் உள்ளடக்கும்.".

**12.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :–

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (i) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (உ உ உ) என்னும் பந்தியில் –

(i) அதன் (1அ) என்னும் உட்பந்தியில் "(உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப் படும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் அல்லாதவை யும்)" என்னும் சொற்களுக்கும் எண் ணுக்கும் பதிலாக, "(உட்பந்திகள் (ii) இலும் அத்துடன் (iiஅ) விலும் குறிப்பீடு செய்யப்படும் பொறித்தொகுதி, எந் திரத்தொகுதி அல்லது பொருத்திகள் அல்லாதவையும்)" என்னும் சொற் களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ii) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "1987, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம், வசுவண்டி, உழவு இயந்திரம், இழுவை வண்டி அல்லது அலுவலகத் தளபாடம் என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1987, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம், லொறி, வசுவண்டி, உழவு இயந்திரம், இழுவை வண்டி அல்லது அலுவலகத் தளபாடங்கள் ((iiஅ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மோட்டார் கோச்சு வண்டியைத் தவிர)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்,

(iii) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ii அ) 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும் அத்தகைய ஆளின் ஊழியர்களை அவர்களது வேலையிடத்துக்கு அல்லது அங்கிருந்து ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படுவதுமான ஏதேனும் மோட்டார் கோச்சு வாகனம் அது கொள்ளப்பட்ட செலவின் நூற்று வீதப்படி ;"

(ஆ) அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியில் "அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அராசங்கத்திற்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(இ) அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் :—

(ப) இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமமளிக்கப்பட்டதான ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் அத்தகைய கம்பனியின் பங்குகளுக்கு 1999, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விலைகோரிப் பெறப்பட்டிருப்பின் அத்தகைய விலைகோரிப் பெறுவதில் 1997, நவெம்பர் 6 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1999, மாச்சு 31 ஆந் தேதிக்கு முன்னர் உறப்பட்ட எவையேனும் செலவுகள்" ; "

(2) அவ்வுட்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் —

(அ) பந்தி (இ) என்பதன் (ii) ஆம் உட்பந்தியில் "விற்பனையின் மூலமாக அல்லாது வேறுவகையில்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விற்பனையின் மூலமாக அல்லாது வேறு வகையில்,

விடயத்திற்கேற்ப அத்தகைய விற்பனை விலையில் அல்லது சந்தைப் பெறுமதியில், 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பன மீதான வரிச்சட்டத்தின்கீழ் அறவிடப்படற்பாலதான பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி உள்ளடக்கப்பட்டிருப்பின் அத்தகைய வரித்தொகையை, விடயத்திற்கேற்ப அத்தகைய விற்பனை விலையிலிருந்து அல்லது சந்தைப் பெறுமதியிலிருந்து கழிப்பனவு செய்த பின்னர்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்.

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் "கொள்ளப்பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொள்ளப் பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(இ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் :–

"(iv) ஆளெவரும் 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தின்கீழ் ஏதேனும் மூலதனச் சொத்தைக் கொள்ளுதல் அல்லது நிர்மாணித்தல் தொடர்பில் செலுத்தப் பட்ட உள்ளீட்டு வரிக்கான கடனுக்கு உரிமைகோரும் உரித்துடையவரா யிருக்குமிடத்து, விடயத்திற்கேற்ப அத்தகைய மூலதனச் சொத்தின் கொள்ளலுக்கு அல்லது நிர்மாணத்திற் கான செலவில் அத்தகைய உள்ளீட்டு வரி அடங்கமாட்டாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் "விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் வரி அல்லது அறவீடு என்ற வகையாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் வரி அல்லது அறவீடு என்ற வகையாக ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(2) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் :–

"(iv) இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாடு தொடர்பில், அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய உள்ளீட்டு வரிக்கான கடனுக்கு உரிமை கோருவதற்கு உரித்துடையவராயிருப்பின், இலாபங்களும் வருமானமும் எந்தக் காலப்பகுதிக்கு ஆய்ந்தறியப்படுகின்றனவோ அந்தக் காலப்பகுதிக்கு 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தின் கீழான உள்ளீட்டு வரி .".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் —

(அ) அப்பந்தியின் (ii) (அ) என்னும் இனத்தில் "(7அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "(7அ) என்னும் உட்பிரிவில், (7ஆ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்,

(ஆ) பந்தி (ஆ) வின் காப்புவாசகத்தின் (iv) ஆம் இனத்தில் "(7அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கத்துக்கும் பதிலாக, "(7அ) என்னும் பந்தியில் (7ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அத்தகைய மீதி முழுத் தொகை அல்லது அதன் பாகம்" என்னும் சொற்க ளிலிருந்து "(2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் இலக்கங் களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"அத்தகைய முழுத்தொகை அல்லது அதன் பாகம் உடனடுத்து வரும் வரிமதிப்பீட்டாண்டிற்கான அவரது நியதிச்சட்டமுறையான மொத்த வருமானத் திலிருந்து மேலும் அவ்வாறே தொடர்ந்தும் கழிக்கப்படுதல் வேண்டும் :

ஆயினும், அத்தகைய முதலாவது வரிமதிப்பீட்டாண் டானது,—

(i) 1997, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, அத்தகைய நட்டம் உறப்பட்ட அத்தகைய வரிமதிப்பீட்டாண்டை அடுத்துறுகின்ற ஆனால் 1997, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு முன்னரான வரிமதிப்பீட்டாண்டுகள் ஒவ்வொன்றிற்கும் அத்தகைய ஆளின் மொத்த நியதிச்சட்ட வருமானத்திலிருந்து அத்தகைய முழுத் தொகை அல்லது அத்தகைய பாகம் கழிப்பனவு செய்யப்பட்ட பின்னர் அதன் மிச்சம் ஏதுமிருப்பின் 1998, மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவுறும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய பொறுப்பு முயற்சியில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட நட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும், என்பதுடன் அதற்கிணங்க,

(ii) 1997, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்து அத்தகைய முழுத் தொகை அல்லது அதன் ஏதேனும் பாகம் கழிப்பனவு செய்யப்பட்ட பின்னர் அதன் மிச்சம் ஏதுமிருப்பின் அது அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டில் அப்பொறுப்பு முயற்சியில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட நட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க,

(2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் கழிப்பனவு செய்யப் படுதலும் வேண்டும்." ;

(3) அப்பிரிவின் (7அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்து வதன்மூலம் :–

"(7ஆ) 1997, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஆளொருவரின் மொத்த நியதிச்சட்ட வருமானம், ஏதேனும் குத்தகை வியாபாரத்திலிருந்து இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்கியிருக்குமிடத்து, அத்தகைய வருமானத்திலிருந்து, எந்தக் குத்தகை வியாபாரம் இலாபமொன்றாக இருந்திருப்பின் இச்சட்டத்தின்கீழ் வரிவிதிக்கப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடியதும் அவரது முன்னைய ஆண்டொன்றின் மொத்த நியதிச்சட்ட வருமானத்திலிருந்து அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்டிராததுமான அந்தக் குத்தகை வியாபாரத்திலிருந்து 1997, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான ஏதேனும் நட்டம் கழிப்பனவு செய்யப் படுதல் வேண்டும்:

ஆயினும், அத்தகைய கழிப்பனவானது, எது விடயத்திலும் அத்தகைய மொத்த நியதிச்சட்ட வருமானத்தில் உள்ளடக்கப் பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும் தொகையை விஞ்சுதலாகாது ; அத்துடன் கூடுமானவரை, அத்தகைய கழிப்பனவு, முதலாவது வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் மொத்த நியதிச்சட்ட வருமானத்திலிருந்தும் அதன்பின்னர் நட்டம் உறப்பட்ட ஆண்டிலும் அத்துடன் அவ்வாறு செய்யமுடியாதிருக்கும்வரை, அடுத்தபடியாக அடுத்துறும் வரிமதிப் பீட்டாண்டின் மொத்த நியதிச்சட்ட வருமானத்திலிருந்தும் என்றவாறு கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான மூன்றாவது காப்புவாசகத்தில் "1989, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1989, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று—அல்லது அதன்பின்னர் ஆனால் 1997 மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கும் அத்துடன் 1997, மாச்சு 31 முதல் 1997, திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியில் "கழிக்கப்படற்பாலதாதல் ஆகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கழிக்கப்படற் பாலதாதல் ஆகாது ;" என்னும் சொற்களை இடுவதன்மூலம்,

(ஆ) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் :—

"(ண) எந்தக் கம்பனியின் பங்குகள் 1999, மாச்சு 31 ஆம் தேதியன்றுள்ளவாறு இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் விலை கோரப்படுகின்றனவோ அந்த ஏதேனும் கம்பனியில் ஏதேனும் உளமாம் பங்கைத் தவிர வேறு ஏதேனும் சாதாரண பங்கின் கொள்வனவில் 1997, நவம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1999, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் எவரேனும் தனியாளினால் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை ;

(த) எவரேனும் ஆளினால் —

(அ) (i) 1997, நவெம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கூட்டிணைக்கப்பட்டதும் ;

(ii) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதும் அவ்வுடன்படிக்கைக்கிணங்க இலங்கையில் உள்ளகக் கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளதும் ; அத்துடன்

(ஆ) (i) 2000, மாச்சு 31 ஆம் தேதி யன்றுள்ளவாறு முந்நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாது வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தையுடையதும் ; அத்துடன்

(ii) 2000, மாச்சு 31 ஆம் தேதி யன்றுள்ளவாறு, கம்பனியால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்புமுயற்சியின் பாவனைக்கு –

(அ) ஏதேனும் கட்டிடத்தின் கொள்வனவில் அல்லது நிர்மாணத்தில் அல்லது ஏதேனும் காணியின், பொறியின், எந்திரத்தின் அல்லது தளபாடத்தின் கொள்வனவில் ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதில் அடங்காத வேறு ஏதேனும் சொத்தின் கொள்ளலில் ஐந்நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாமல் முதலிடு செய்துள்ளதுமான

ஏதேனும் கம்பனியில் ஏதேனும் உளதாம் பங்கைத் தவிர வேறு ஏதேனும் சாதாரண பங்கின் கொள்வனவில் 1997, நவெம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2000, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் முதலிடு செய்யப்பட்ட ஏதேனும் பணத் தொகை ;

(ந) 1998, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எவரேனும் ஆளினால் —

(i) பிரிவு 11 (அஅஅஅ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனியில்; அல்லது

(ii) 17க என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனியில் முதலீடு செய்யப்பட்ட பணத் தொகை பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாததாயிருக்கின்றதெனவும் அத்துடன், அத்தகைய தொகை அப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில் பயன்படுத்தப்பட்டதெனவும் மதிப்பீட்டாளரின் திருப்திக்கேற்ப எண்பிக்கப்படுமிடத்து,

அத்தகைய ஏதேனும் கம்பெனியில், ஏதேனும் உளதாம் பங்கைத் தவிர வேறு ஏதேனும் சாதாரண பங்கின் கொள்வனவில் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை.";

(2) அப்பிரிவின் (5உ). என்னும் உட்பிரிவில் —

(i) (அ) அவ்வுட்பிரிவில் (அ) என்னும் பந்தியின் —
(i) ஆம் உட்பந்தியில் "(2) ஆம் உட்பிரிவில் (ஆ), (இ), (க), (ங), (ட) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களுக்கும் எழுத்துக்களுக்கும் பதிலாக, "(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங), (ட), (ண), (த) அத்துடன் (ந) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களையும் எழுத்துக்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) உட்பந்தி (iii) என்பதில் "விஞ்சுதலாகாது ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விஞ்சுதலாகாது ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(iiiஅ) அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட (2)ஆம் உட்பிரிவின் (ண) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா தகைமைபெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் அத்தகைய வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தின் மூன்றிலொன்றை விஞ்சுதலாகாது ;

(iiiஆ) அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட (2)ஆம் உட்பந்தியின் (த) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாத் தகைமைபெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் ; அத்துடன்" ;

(ii) "(ஆ) பந்தி (ஆ) வில் " (ஆ). (இ). (க). (ங) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களுக்கும் எழுத்துக்களுக்கும் பதிலாக, "(ஆ). (இ). (க). (ங). (ந) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களையும் எழுத்துக்களையும் இடுவதன் மூலமும்" ;

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (i) ஆம் உட்பிரிவில் "செலுத்தப்பட்டதாகக் கருதப்பட்டதுமான அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செலுத்தப்பட்டதாகக் கருதப்பட்டதுமான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்—

(ஆ) அவ்வுட்பிரிவின் (ii) ஆம் உட்பிரிவில் "உட்பிரிவு (2) இன் (ட) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உட்பிரிவு (2) இன் (ட) அல்லது (த) என்னும் பந்தியில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (7அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(7அஅ) ஏதேனும் கம்பனியில் ஏதேனும் பங்கின் கொள்வனவு தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து விடுதொகையொன்றின் கழிப்பனவொன்றுக்கு உரித்துடையவரான ஆளெவரும் அத்தகைய பங்கை விற்குமிடத்து அல்லது அத்தகைய பங்கு தொடர்பில் ஏதேனும் பணத்தை மீளப் பெறுமிடத்து, பணமாக மாற்றிப் பெறுமிடத்து அல்லது பெற்றுக்கொள்ளுமிடத்தும் அத்துடன் வேறு எந்தச் சாதாரண பங்குகள் தொடர்பில் அவ்வுட்பிரிவின்கீழ் அவரது வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து கழிப்பனவொன்றுக்கு உரித்துடையவராகின்றாரோ அந்த வேறு சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்யுமிடத்தும் அவர், இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்குகளின் கொள்வனவு தொடர்பில் வருமான வரியிலிருந்து எந்தக் கழிப்பனவுக்கு உரித்துடையவராகின்றாரோ அந்தக் கழிப்பனவு, அவர் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்குகளின் கொள்வனவு தொடர்பில் வருமான வரியிலிருந்து எந்தக் கழிப்பனவுக்கு உரித்துடையவராக இருந்தாரோ அந்தக் கழிப்பனவின் தொகையால் குறைக்கப்படுதல் வேண்டும்.".

**17.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(i) 1996, நவெம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2000, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் ;".

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "முதலீட்டின் முழுத்தொகை ஆகிய இவற்றுள் எது குறைந்ததோ அதுவாக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவில் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "அத்தகைய முதலீட்டு வரிவிடுதொகையின் முழுத்தொகை ஆகிய இவற்றுள் எது குறைந்ததோ அதுவாக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ii) ஆம் பந்தியில் "1996, நவெம்பர் 6 ஆம் தேதி தொடங்கி 1999, மாச்சு - 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது", என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக,

"(அ) அத்தகைய சொத்து 1998, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன் கொள்ளப்பட்டிருக்குமிடத்து அல்லது கொள்ளப்பட்டதாகக் கருதப்படுமிடத்து, 1996, நவெம்பர் 6ஆம் தேதி தொடங்கி 1999, மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது ; அல்லது

(ஆ) அத்தகைய சொத்து 1998, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் கொள்ளப்பட்டுள்ளவிடத்து, அல்லது கொள்ளப்பட்டதாகக் கருதப்படுமிடத்து 1998, ஏப்பிறல் 1ஆம் தேதி தொடங்கி 2000, மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப் பகுதியின் போது" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 இஇஇ என்னும் பிரிவைத் திருத்துதல்.

18. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 32இஇஇ என்னும் பிரிவு அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) பதினோராம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் (அஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றில் தொழிலுக் கமர்த்தப்பட்டுள்ளவரும் 67 ஆம் பிரிவின் (7) ஆம்

உட்பிரிவின்கீழ் ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வதிவற்றவராகக் கருதப்படுகின்றவருமான தனியாளொருவர் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற பின்னரும் அத்தகைய கம்பனியில் தொடர்ந்து தொழிலிலிருக்குமிடத்து, ஐந்தாண்டுகளைக் கொண்ட அத்தகைய காலப்பகுதியின் இறுதியிற் தொடங்கி அத்தகைய கம்பனியால் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட காலப்பகுதியின் கடைசி நாளன்று முடிவடையும் காலப்பகுதிக்கு அக்கம்பனியிலான தொழிலிலிருந்து அத்தகைய தனியாளின் இலாபங்கள், இச்சட்டத்தின் (viii) ஆம் அத்தியாயத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பதினைந்து சதவீதப்படி வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும் .".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**19.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "இலங்கை மத்திய வங்கியால் வைத்திருக்கப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1998 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியால் வைத்திருக்கப்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஈஈஈ, 32ஈஈஈஈ, 32ஈஈஈஈஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஈஈ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 32ஈஈஈ, 32ஈஈஈஈ, 32ஈஈஈஈஈ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"கம்பனியொன்றல்லாத வேறு ஆளொருவரால் கொண்டு நடாத்தப்படும் குறித்த சில பொறுப்பு முயற்சிகளிலிருந்து வரும் இலாபங்கள் மீது வருமான வரி வீதம்.

32ஈஈஈ (1) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (கம்பனியொன்றல்லாத வேறு) எவரேனும் ஆளின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தில், ஏதேனும் விவசாயப் பொறுப்புமுயற்சியிலிருந்து அல்லது உல்லாசப் பிரயாணத்துறையை ஊக்குவிப்பதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து வரும் எவையேனும் இலாபங்களும் வருமானமும்

(இப்பிரிவில் இதனகத்துப்பின்னர் "குறித்துரைக் கப்பட்ட இலாபங்கள்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) அடங்குமிடத்தும், அத்துடன் அத்தகைய வருமானத்தின் பாகமொன்றின்மீது (இப்பிரிவில் இதனகத்துப்பின்னர் "வருமானத்தின் இயைபான பாகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செலுத்தப் படற்பாலதான வருமான வரிவீதம் பதினைந்து சதவீதத்தை விஞ்சுகின்றவிடத்தும், அப்போது வருமானத்தின் இயைபான பாகம் தொடர்பில் வரியானது பின்வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) வருமானத்தின் இயைபான பகுதி, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட இலாபங்களின் தொகையை விஞ்சினால் —

(i) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட இலாபங்களின் தொகைக்குச் சமனான வருமானத்தின் இயைபான பாகத்தின் அத்தகைய பகுதிமீது செலுத்தப்படற்பாலதான வரியானது, பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) வருமானத்தின் இயைபான பாகத்தின் மீது செலுத்தப்படற்பாலதான வரியானது, இச்சட்டத்தின்கீழ் அதற்கு ஏற்புடைத்தானவாறாகப் பதினைந்து சதவீதத்துக்கு மேலுள்ள வரிவீதங்களுக்கிணங்க கணிக்கப் படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட இலாபங்களின் தொகையை, வருமானத்தின் இயைபான பாகம் விஞ்சாவிட்டால், வருமானத்தின் முழு இயைபான பாகத்தின்மீதும் செலுத்தப்படற்பாலதான வரியானது, இவ்வத்தியாயத்தின் அல்லது (viii அ) என்னும் அத்தியாயத்தின் வேறு ஏற்பாடுகளுக்கு முரணாக எது எப்படியிருப்பினும், பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக —

(அ) "கமத்தொழில் பொறுப்புமுயற்சி" என்பது —

(i) கடற்றொழில் ;

(ii) எத்தன்மைத்தான விவரணத்தைக் கொண்டனவுமான தாவரங்களைப் பயிரிடும் காணி; அத்துடன்

(iii) எத்தன்மைத்தான விவரணத்தைக் கொண்டனவுமான தாவரங்களைப் பயிரிடுவதற்கான காணிக்கான ஏதேனும் பொறுப்புமுயற்சிக்கான முகாமைச் சேவைகளை வழங்குதல்,

ஆகியவற்றுக்கான பொறுப்புமுயற்சி எதனையும் உள்ளடக்கும் ;

(ஆ) "உல்லாசப் பிரயாணத்தை மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்புமுயற்சி" என்பது —

(i) இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓட்டலை அல்லது விருந்தினர் மனையை ; அல்லது

(ii) "வகுப்பு அ" அல்லது "வகுப்பு ஆ" வில் இருப்பதாக இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினால் தரம் வழங்கப்பட்ட உணவுச்சாலையை ;

(iii) பிரயாண முகவர் ஒருவரின் ஏதேனும் தொழிலை ;

(iv) உல்லாசப் பிரயாணிகளைக் கொண்டுசெல்லும் ஏதேனும் தொழிலை ;

(v) பொழுதுபோக்குக்கு அல்லது விளையாட்டுகளுக்கு வசதிகள் வழங்குவதற்காக இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தொழிலை,

நடாத்துவதற்கான பொறுப்புமுயற்சி ஒன்றெனப் பொருள்படும் ;

(இ) "ஏதேனும் கமத்தொழில் பொறுப்பு முயற்சியில் கிடைக்கும் இலாபங்களும் வருமானமும்" என்பது –

(i) பந்தி (அ) வின் (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொறுப்பு முயற்சியொன்றின் விடயத்தில், முகாமைச் சேவைகளை வழங்குவதற்கான கட்டணங்களில் இருந்து கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம், அத்துடன்

(ii) ஏதேனும் வேறுவிடயத்தில், அத்தகைய பொறுப்பு முயற்சியின் விளைபொருளை ஏதேனும் உற்பத்திச் செயல்முறைக்கு அல்லது தயாரிப்புக்கு உட்படுத்தாமல் அத்தகைய விளைபொருளின் விற்பனையில் இருந்துகிடைக்கும் இலாபங்களும், வருமானங்களும்,

எனப் பொருள்படும் ;

ஆயின், ஆளெவரும், உற்பத்திக்கான செய்முறைக்கு அல்லது தயாரிப்புக்கு அத்தகைய கமத்தொழில் பொறுப்புமுயற்சியின் விளைபொருளை உட்படுத்துவதற்காக ஏதேனும் பொறுப்பு முயற்சியைக் கொண்டுநடாத்துகின்ற

விடத்து, கமத்தொழில் பொறுப்பு முயற்சியின் விளை பொருளானது, (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் நோக்கத்துக்காக, விற்பனை செய்யப்பட்டதாகக் கருதப்படும் நேரத்தில் நிலவிய திறந்த சந்தை விலையில் விற்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கமத்தொழில் பொறுப்பு முயற்சியின் உற்பத்தியின் விற்பனையிலிருந்து பெறும் இலாபம், அத்தகைய கருதப்பட்ட விற்பனையிலிருந்து வரும் இலாபமுமாகும்.

கம்பனி ஒன்றினால் கொண்டு நடாத்தப்படும் குறித்தசில பொறுப்பு முயற்சிகளிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மீதான வருமானவரி வீதம்.

32ஈஈஈஈ. (1) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் கம்பனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், ஏதேனும் கமத்தொழில் பொறுப்பு முயற்சியிலிருந்து அல்லது உல்லாசப் பிரயாணத்தை மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்புமுயற்சியில் இருந்து கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம் எவற்றையும் உள்ளடக்குகின்றவிடத்து, அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் கொண்டிருக்கக் கூடியவாறான அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான அத்தகைய வருமானத்தின் அத்தகைய பாகமானது, இவ்வத்தியாயத்தின் அல்லது VIIIA என்னும் அத்தியாயத்தின் அல்லது IX என்னும் அத்தியாயத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "கமத்தொழில் பொறுப்புமுயற்சி", "உல்லாசப் பிரயாணத்தை மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்புமுயற்சி" அத்துடன் "ஏதேனும் கமத்தொழில் பொறுப்புமுயற்சியில் இருந்து கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம்" என்னும் சொல்லமைப்புகள், 32ஈஈஈ என்னும் பிரிவில் அவ்வவற்றிற்கு ஒதுக்கப்பட்ட அப்பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

32ஈஈஈஈ என்னும் பிரிவுக் கிணங்க, வரி விதிக்கப்பட்ட இலாபங்களிலிருந்து செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் மீதான வருமான வரி வீதம்.

32ஈஈஈஈஈ. (1) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (கம்பனி ஒன்று தவிர்ந்த) ஆளெவரினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் —

(அ) 32ஈஈஈஈ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இலாபங்கள் மற்றும் வருமானம் ஆகியவற்றில் இருந்து கிடைத்த பங்கிலாபம் ஒன்றாக இருக்கின்ற பங்கிலாபம் எதனையும் உள்ளடக்குகின்ற விடத்து ; அல்லது

(ஆ) ஒன்றோ அல்லது அதற்குமேற்பட்ட இடைநிலைக் கம்பனிகள் ஊடாக 32ஈஈஈஈ ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள கம்பனி ஒன்றிலிருந்து நேரடியாகக் கம்பனி எதனாலும் பெறப் பட்டதும், (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறானதுமான அத்தகைய ஏதேனும் பங்கிலாபத்திலிருந்து கிடைக்கும் பங்கிலாபம் ஒன்றாக இருக்கும் பங்கிலாபம் எதனையும் உள்ளடக்குகின்ற விடத்து, முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்கிலாபமானது, எவ்வரிமதிப் பீடாண்டின்போது 32ஈஈஈஈ என்னும் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள இலாபங்களும் வருமானமும் எழுந் தனவோ அல்லது வந்து சேர்ந்தனவோ, அவ்வாண்டின்போது அல்லது அவ்வரிமதிப்பீட்டாண்டின் முடிவில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் செலுத்தப்பட்டிருந்தால், அத்துடன் (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில், வரு மானத்தின் இயைபான பாகம் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய வருமானத்தின் பாகம் ஒன்றின்மீது செலுத்தப்படற்பாலதான வருமானவரி வீதமானது, பதினைந்து சதவீதத்தை விஞ்சுமானால், வருமானத்தின் இயைபான பாகம் தொடர்பில், வரியானது, பின் வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும் :—

(i) வருமானத்தின் இயைபான பாகம், அத்தகைய பங்கிலாபங்களின் தொகையை விஞ்சினால் —

அத்தகைய பங்கிலாபங்களின் தொகைக்குச் சமனானவாறான வருமானத்தின் இயைபான பாகத்தின் அத்தகைய பாகத்தின்மீது செலுத்தப்படற்பாலதான வரியானது, பதினைந்து சதவீதத்தில் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

வருமானத்தின் இயைபான பாகத்தின் மீதியின்மீது செலுத்தப்படற்பாலதான வரியானது, இச்சட்டத்தின்கீழ் அதற்கு ஏற்புடைத்தானவாறாக, வரியின் அத்தகைய வீதங்களுக்கிணங்க பதினைந்து சதவீதத்துக்குமேல் கணிக்கப்படுதல் வேண்டும் ;

(ii) வருமானத்தின் இயைபான பாகம், வருமானத்தின் முழுமையான இயைபான பாகத்தின்மீது செலுத்தப்படற்பாலதான அத்தகைய பங்கிலாபத் தொகையை விஞ்சாவிட்டால், வருமானமானது, இவ்வத்தியாயத்தின் அல்லது (viii அ) என்னும் அத்தியாயத்தின் வேறு ஏற்பாடுகளில் முரணாக எது எப்படியிருப்பினும், பதினைந்து சதவீதத்தில் இருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்கிலாபத்தை உள்ளடக்குகின்றவிடத்து, அத்தகைய பங்கிலாபத்தைக் கொண்டுள்ளவாறான அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்துக்கு ஏற்புடைத்தான வருமானவரியின் வீதமானது, 35 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, பதினைந்து சதவீதமாக இருத்தல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 32 உஉஉஉ மற்றும் 32 உஉஉஉஉ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**21.** பின்வரும் புதிய பிரிவுகள் 32உஉஉ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை, முறையே, முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉஉஉ மற்றும் 32உஉஉஉஉ என்னும் பிரிவுகளாகப் பயனுறதலும் வேண்டும் :—

"குறித்தசில நிபந்தனைகளின்கீழ் ஏதேனும் விலை கோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியினால் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து கழித்தல்.

32உஉஉஉ. (1) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கம்பனியின் வரிவதிக்கப்படற்பாலதான வருமானம், 3(அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள் வரும் எவையேனும் இலாபங்களையும், வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து, அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அக்கம்பனியினால் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து, அத்தகைய இலாபங்களையும், வருமானத்தையும் கொண்டுள்ளவாறான அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்தின் ஐந்து வீதத்திற்குச் சமமான தொகையொன்று கழிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், அவ்வாறு கழிக்கப்படற்பாலதான தொகையானது, அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய கம்பனியினால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வரியை விஞ்சுகின்றவிடத்து, விஞ்சுதொகையானது மீளளிக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் —

(அ) அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கு, விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றாக இருக்கின்ற கம்பனி எதற்கும் ; அத்துடன்

(ஆ) எக்கம்பனி தொடர்பில் அத்தகைய கம்பனியின் பங்கு இடாப்பில் பங்குதாரர்களாக, அவ்வரிமதிப்பீட்டாண்டின்போது பதிவு செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எந்நேரத்திலும் 300 பேர்களுக்குக் குறைவாக இல்லையென வரிமதிப்பீட்டாளர் திருப்திப் படும் அக் கம்பனி எதற்கும் ஏற்புடைய தாதல் வேண்டும்.

(3) (அ) 1997 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப் பீட்டாண்டுக்கு, விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனி யொன்றாக இருக்கின்ற ஏதேனும் கம்பனி தொடர்பில் ; அத்துடன்

(ஆ) எக்கம்பனி தொடர்பில், 1998 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆம் தேதியன்று உள்ளவாறாக அத்தகைய கம்பனியின் பங்கு இடாப்பில் பங்குதாரர்களாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை 300 பேர்களுக்குக் குறையாமல் இருக்கின்றதென வரிமதிப்பீட்டாளர் திருப்திப் படுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கழிப்பானது, 1997, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப் பீட்டாண்டுக்கு அக்கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பங்குகளின் விலை கோரலைப் பெற்று, குறித்த சில நிபந்தனைகளைத் திருப்திப் படுத்தும் ஏதேனும் கம்பனியினால் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்தான கழித்தல்.

32உஉஉஉ. (1) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கம்பெனியின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம், 3 (அ) ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள் வரும் எவையேனும் இலாபங்களையும், வருமானத்தையும் உள்ளடக்கு கின்றவிடத்து, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கு அக்கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து, அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் கொண்டுள்ளவாறான அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்தின் ஐந்து வீதத்துக்குச் சமனான ஒரு தொகை கழிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், அவ்வாறு கழிக்கப்படற்பாலதான தொகை, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கு அத்தகைய கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வரியை விஞ்சுகின்றவிடத்து, விஞ்சுதொகை மீள அளிக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் —

(அ) எக்கம்பனியின் பங்குகள், அவ்வரிமதிப் பீட்டாண்டின் மாச்சு 31 ஆம் தேதியன்று உள்ளவாறாக, அவ்வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விளைவாக, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்கு வியாபாரிகள் சந்தையினால் வெளியிடப்பட்ட ஏதேனும் உத்தியோகபூர்வ நிரலில் விலைகோரப்பட்டுள்ளதோ, அக்கம் பனிக்கு ; அத்துடன்

(ஆ) எக்கம்பனி தொடர்பில், அவ்வரிமதிப்பீட்டாண்டின் மாச்சு 31 ஆம் தேதியன்று உள்ளவாறாக அத்தகைய கம்பனியின் பங்கு இடாப்பில் பங்குதாரர்களாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை முந்நூறு பேர்களுக்குக் குறைவாக இல்லாதிருக்கின்றதென வரி மதிப்பீட்டாளர் திருப்தியுறும் அக்கம்பனி எதற்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில், (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள "கொளிக் கம்பெனி" மற்றும் "துணைநிலைக் கம்பெனி" என்னும் சொல்லமைப்புகள், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவில் அவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அவ்வப்பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் கம்பனி தொடர்பில்—

(அ) எக்கம்பனியின் பங்குகள், 1998 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விளைவாக, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமம் வழங்கப்பட்ட ஏதேனும் பங்கு வியாபாரிகள் சந்தையினால் வெளியிடப்பட்ட ஏதேனும் உத்தியோக பூர்வ பட்டியலில் 1999 மாச்சு 31 ஆம் தேதியன்று உள்ளவாறாக, விலை கோரப்பட்டனவாக இருக்கின்றவிடத்து, அத்துடன்

(ஆ) 1998 மாச்சு 31 ஆம் தேதியன்று உள்ளவாறாக எக்கம்பனியின் —

பங்கு இடாப்பில் பங்கு தாரர்களாகப் பதிவுசெய்யப் பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை முந்நூறு பேர்க ளுக்குக் குறைவாக இல்லா திருக்கின்றதென வரி மதிப்பீட் டாளர் திருப்தியுறும் அக்கம் பனி எதற்கும் ஏற்புடையதா தல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**22.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியில் "பிரிவு 32 ஊ அல்லது 32 ஏ" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "பிரிவு 32 ஈஈஈஈ அல்லது பிரிவு 32 ஊ அல்லது பிரிவு ஏ" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**23.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறாக முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 இ என்னும் பிரிவு, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில் —

(அ) அவ்வுட்பந்தியின் (i) என்னும் விடயத்தை உடனடுத்துப்பின்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(iஅ) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 54 சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ அப்பங்கிலாபங்கள் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பந்தியின் (ivஅ) மற்றும் (ivஆ) என்னும் விடயங்களை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் விடயங்களை இடுவதன் மூலமும் :-

(v) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் பதினேழு சதவீதத்தில் முற்பணக் கம்பனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள் ;

(vi) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் பதினொரு சதவீதத்தில் முற்பணக் கம்பனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள் ;

(vii) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் எட்டுச் சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள் ; அத்துடன் –

(viii) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் ஐந்து சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள் ;";

(2) அப்பிரிவின் (2) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில், அவ்வுட்பந்தியின் (iii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்னர், பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(iiiஅ) 32 ஈஈஈஈ ஆம் பிரிவின் கீழ்"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**24.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறாக, முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பந்தியின் (i) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்னர், பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

"(iஅ) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 54 சத வீதத்தில் முற்பணக் கம்பனி வரி செலுத்தப் பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள் ;";

(2) அப்பந்தியின் (ivஅ) மற்றும் (ivஆ) என்னும் விடயங்களை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலம் :—

(ivஅ) பெறப்பட்டனவான எப்பங்கிலாபங்கள் தொடர்பில் பதினேழு சதவீதத்தில் முற்பணக் கம்பனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள் ;

(ivஆ) பெறப்பட்டனவான எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 11 சதவீதத்தில் முற்பணக் கம்பனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள் ;

(ivஇ) பெறப்பட்டனவான எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 8 சதவீதத்தில் முற்பணக் கம்பனி வரிசெலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள் ;

(ivஈ) பெறப்பட்டனவான எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 5 சதவீதத்தில் முற்பணக் கம்பனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவு, அதன் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(9) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "ஆவணம்" என்னும் சொல்லமைப்பானது, ஏதேனும் கணனி நிகழ்ச்சித் திட்டம் அல்லது தரவுகள், தொகுக்கப்பட்ட வடிவத்தில் அல்லது எலெக்ட்ரொனிக் அல்லது காந்தசக்தி அல்லது வேறு மூலத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டிருக்கும் அல்லது பதிவுசெய்யப் பட்டிருக்கும் ஏதேனும் டிஸ்கெற்றை, நாடாவை, கொம்பாக்ற் டிஸ்கை அல்லது வேறு ஏதேனும் பொருளை உள்ளடக்கும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "தொழில்தருநரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"தொழில்தருநரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்;

ஆயின், ஏதேனும் மோசடி, தவிர்ப்பு அல்லது வேண்டுமென்றே தவறுகை புரிதல், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் எவரேனும் தொழில்தருநரினால் கழிக்கப்படற்பாலதான ஏதேனும் வருமான வரி தொடர்பில், அத்தகைய தொழில்தருநரினால் அல்லது எவரேனும் தொழில்தருநர் சார்பில் புரியப்பட்டிருக்கிறதென, வரிமதிப்பீட்டாளர் அபிப் பிராயப்படுகின்றவிடத்து, அத்தகைய தொழில்தருநர் மீது, அவ்வரிமதிப்பீட்டாண்டு முடிவுற்ற பின்னர், எந்நேரத்திலும் மதிப்பீடொன்றைச் செய்வது அல்லது மேலதிக மதிப்பீடொன்றைச் செய்வது, வரிமதிப்பீட் டாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஊ என்னும் பிரிவு, "அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்காக அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் கழித்து ஆணையாளர்—தலைமையதிபதிக்குக் கொடுத்திருக்கவேண்டிய வருமானவரித் தொகையை அல்லது மேலதிக வருமானவரித் தொகையை" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவு வரை உள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்காக, வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி, அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் கழித்து, ஆணையாளர்-தலைமையதிபதிக்குக் கொடுத்திருக்க வேண்டிய வருமானவரித் தொகையை அல்லது மேலதிக வருமானவரித் தொகையை மதிப்பீடு செய்யலாமென்பதுடன், அத்தகைய பணத்தொகையையும் அத்துடன் சேர்த்து 113ஏ என்னும் பிரிவின்கீழ் கொடுக்குமதியாக இருக்கக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையையும் உடனடியாகக் கொடுக்கும்படி எழுத்துமூலமான அறிவித்தலினால் அத்தகைய வங்கியை அல்லது நிதி நிறுவனத்தைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்:

ஆயின், ஏதேனும் மோசடி, தவிர்ப்பு அல்லது வேண்டுமென்றே தவறுகை புரிதல், அத்தகைய ஏதேனும் வங்கியினால் அல்லது நிதி நிறுவனத்தால் அல்லது இவற்றின் சார்பில், அத்தகைய வங்கியினால் அல்லது நிதி நிறுவனத்தால் கழிக்கப்படற்பாலதான அத்தகைய ஏதேனும் வருமானவரி தொடர்பில் புரியப்பட்டிருப்பதாக வரிமதிப்பீட்டாளர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு முடிவுற்ற பின்னர் எந்நேரத்திலும், அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் மீது மதிப்பீடொன்று அல்லது மேலதிக மதிப்பீடொன்று செய்வது, வரிமதிப்பீட்டாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(3) சபைக்கு, மூன்று சட்ட ஆலோசகர்களுக்கு மேற்படாத குழுமம் ஒன்று இருத்தல் வேண்டும். இவர்கள் சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவைத் திருத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவு, அதன் (7) ஆம் உட்பிரிவில், "பொருள்" என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்னர், பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"ஆவணம்" என்பது, தொகுக்கப்பட்ட வடிவத்தில் அல்லது எலெக்ட்ரோணிக், காந்த சக்தி அல்லது வேறு மூலத்தில் கணனி நிகழ்ச்சித்திட்டம் அல்லது தரவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது பதியப்பட்டிருக்கும் ஏதேனும் டிஸ்கெற், நாடா, கொம்பாக்ற் டிஸ்க் அல்லது வேறு ஏதேனும் பொருள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 161அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 161அ என்னும் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர், பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இஇ) அத்தகைய ஏதேனும் கட்டிடத்தில் காணப்படும் ஏதேனும் கணனியை இயக்கலாம் அத்துடன், அதில் பதிவுசெய்யப்பட்டிருக்கும் அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் எவையேனும் பதிவுகளின் முழுமையான அல்லது பகுதியளவிலான அச்சுப்பிரதிகளை எடுக்கலாம் ;";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவு, "பொருள்" என்பதற்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாக, "பொருள் மற்றும் ஆவணம்" என்பது, முறையே அவற்றுக்கு 161 ஆம் பிரிவினால் குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :

முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**31.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு "தகைமையளிக்கும் பகிர்ந்தளிப்பு" என்னும் வரைவிலக்கணத்தில், பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் "அத்தகைய சட்டத்தின் 17 ஆம் பிரிவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் ஒன்றில் பத்துசத வீதமாக அல்லது பதினைந்து சதவீதமாக அல்லது முப்பத்தைந்து சதவீதமாக உள்ளதுமான ஒரு வீதத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அவ்வரைவிலக்கணத்தின் ஆ என்னும் பந்தியில், "(ii) பிரிவு 32ஊள, பிரிவு 32ஏ அல்லது 32ஓ என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க, வரிவிதிக்கப் படுமோ" என்னும் சொற்கள், இலக்கங்கள் ஆகிய வற்றிலிருந்து அவ்வரைவிலக்கணம் முடியும் வரை உள்ள சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் :—

"(ii) பிரிவு 32ஊள அல்லது பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க அல்லது பிரிவு 32ங அல்லது பிரிவு 32ஈஈஈஈ என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க வரி விதிக்கப்படுமோ,

அவ்விலாபங்களான கம்பனியின் அத்தகைய இலாபங்களிலிருந்து பணமாக அல்லது பணம் செலுத்துவதற்கான கட்டளை ஒன்றாகப் பகிர்ந்தளிக் கப்பட்ட மொத்தப் பங்கிலாபம் முழுவதும் அல்லது அதன் ஒரு பாகம் என்று பொருள்படும். ஆனால்,

(அ) அது —

(i) 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய கம்பனிக்குத் திரண்ட அல்லது சேர்ந்த இலாபங்களிலிருந்து அல்லது வருமானத்திலிருந்து ;

(ii) அதன் விலக்களிக்கப்பட்ட இலாபங்களில் அல்லது வருமானத்தில் இருந்து ;

(iii) அத்தகைய கம்பனியால் பெறப்பட்ட பங்கி லாபத்திலிருந்து அல்லது வருமானத்தி லிருந்து ;

(iv) அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பில், அத்தகைய வேறு ஆள்புலத்தில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரிக்காக, இச்சட்டத்தின் 33(1) (அ) என்னும் பிரிவின் கீழ் அத்தகைய கம்பனியினால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய இலா பங்கள் மற்றும் வருமானம் தொடர்பிலான ஏதேனும் வருமான வரிக்கு எதிராக 82ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் அத்தகைய கம்பனி வரவுகோர உரித்துடையதாக இருந்தால், இலங்கைக்கு வெளியே ஏதேனும் ஆள்புலத்தி லிருந்து அத்தகைய கம்பனிக்குத் திரளு கின்ற அல்லது சேருகின்ற அல்லது அத்த கைய கம்பனியால் பெறப்படுகின்ற ;

(v) "பிரிவு II(அஅஅஅஅ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டனவும், எக்காலப்பகுதியின் போது, அத்தகைய இலாபங்களிலிருந்து, செலுத்தப்பட்ட பங்கிலாபங்களுக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட் டிருக்கின்றதோ, அக்காலப் பகுதியின் போதானவுமான இலாபங்களிலிருந்து அத்துடன் வருமானத்திலிருந்து, பகிர்ந்தளிக் கப்படுகின்ற ;

(ஆ) எந்த ஆளுடைய இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் 8 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுகின் றனவோ அந்த எவரேனும் ஆளுக்குச் செலுத்தப் பட்ட;

(இ) வதிவற்ற எவரேனும் ஆளுக்கு 1988 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செலுத்தப்பட்ட, ஏதேனும் பங்கிலாபத்தை

உள்ளடக்காது.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஆறாம் அட்டவணையைத் திருத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஆறாம் அட்டவணை, "இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடைமைக்குக் கொடுக்கப்பட்ட அல்லது வரவில் வைக்கப்பட்ட வட்டி, வாடகை, நில வாடகை, அரசுரிமைப் பணம் அல்லது ஆண்டுத்தொகை" என்பவற்றிலிருந்து "கழிக்கப்படும் வருமானவரியின் வீதம் .............................. 33 1/3 சதவீதம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடைமைக்குக் கொடுக்கப்பட்ட அல்லது வரவில் வைக்கப்பட்ட வட்டி, வாடகை, நில வாடகை, அரசுரிமைப் பணம் அல்லது ஆண்டுத்தொகை என்பவற்றிலிருந்து கழிக்கப்படும் வருமானவரியின் வீதம் :—

1998, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவுறும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு .......................................... 33 1/3 சதவீதம்";

1998, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ முடிவுறும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ........................................ 20 சதவீதம்".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஏழாம் அட்டவணையைத் திருத்துதல்.

33. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஏழாம் அட்டவணை, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) "1997, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக்கம்பனி வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1997, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்றோ அல்லது

அதற்குப் பின்னரோ, ஆனால் 1998, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக்கம்பனி வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வட்டவணையின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :—

"1998, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும், முற்பணக் கம்பனி வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(i) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமனான தொகைமீது —

(அ) 32உள அல்லது 32ஏ அல்லது 32ஒ அல்லது 32க அல்லது 32ங அல்லது 32ஈஈஈஈ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதமொன்றில் வரிவிதிக்கப்படும் இலாபங்கள் தவிர்ந்த இலாபங்கள் அல்லது வேறு இலாபங்களிலிருந்து

54 சதவீதம்.

(ஆ) 32ஏ அல்லது 32ஒ அல்லது 32க அல்லது 32ங அல்லது 32ஈஈஈஈ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தேசிய அரசப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளதும் அக்கம்

பனிக்கு ஏற்புடைத்தானதுமான பதினைந்து சதவீதத்தில் வரி விதிக்கப்படும் இலாபங்களிலிருந்து

17 சதவீதம்.

(இ) 32ஏ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்க அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தேசிய அரசப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் குறித் துரைக்கப்பட்டதும், அக்கம்பனிக்கு ஏற்புடைத்தானதுமான பத்து சத வீதத்தில் வரிவிதிக்கப்படும் இலா பங்களில் இருந்து.

11 சதவீதம்.

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றல்லாத நம்பிக்கைப் பொறுப்புக்கூறு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது வேறு ஏதேனும் கம்பனியால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றின தும் தொகைக்குச் சமனான தொகைமீது –

(அ) (32ஊ அல்லது 32ஏ அல்லது 32ஒ அல்லது 32க அல்லது 32ங என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தேசிய அரசப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் வரிவிதிக்கப்படும் இலா பங்கள் தவிர்ந்த) இலாபங்கள் அல்லது வேறு இலாபங்களிலிருந்து

27 சதவீதம்.

(ஆ) 32ஏ அல்லது 32ஒ அல்லது 32க அல்லது 32ங அல்லது 32சசசச என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அல்லது 1978 ஆம் ஆண் டின் 4ஆம் இலக்க தேசிய அரசப் பேரவையின் இலங்கை முதலீட்டுச்

சபைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டதும் அக்கம்பெனிக்கு ஏற்புடைத்தானதுமான பதினைந்து சதவீதத்தில் வரிவிதிக்கப்படும் இலாபங்களிலிருந்து
8 சதவீதம்.

(இ) 32ஊள என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தேசிய அரசப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டதும், அக்கம்பெனிக்கு ஏற்புடைத்தானதுமான பத்து சதவீதத்தில் வரிவிதிக்கப்படும் இலாபங்களிலிருந்து
5 சதவீதம்.

34. (1) இச்சட்டத்தின் 2(2) அத்துடன் 2(3) ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்காகவும் 1996 திசெம்பர் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ; கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்.

(2) இச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 1996 நவெம்பர் 6 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 1997 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், எல்லா நோக்கங்களுக்காகவும், 1997 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(5) (i) இச்சட்டத்தின் 3(2)ஆம் பிரிவிலிருந்து 3(4) ஆம் பிரிவு வரையுள்ள பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் ;

(ii) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் ;

(iii) இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஒ என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் ;

(iv) இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவினால் 17ஓ என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் ;

(v) இச்சட்டத்தின் 12(1) (ஆ) என்னும் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் ;

(vi) முப்பத்தோராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (ந) என்னும் பந்தியில் உட்புகுத்தப்பட்டது தவிர்ந்த இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவுக்கு செய்யப்பட்ட வேறு திருத்தம்.

எல்லா நோக்கங்களுக்காகவும் 1997 நவெம்பர் 6 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் முறையே 2(1), 15 மற்றும் 19 ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8, 30 மற்றும் 32ஈ ஆம் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 1996 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) (i) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவுக்கு ;

(ii) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவுக்கு ;

(iii) இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஈ என்னும் பிரிவுக்கு ;

(iv) இச்சட்டத்தின் (உட்பிரிவு (1) இன் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகள் தவிர்ந்த) 12 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவுக்கு ;

(v) இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவுக்கு ;

(vi) இச்சட்டத்தின் 17(1) மற்றும் 17(3) ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவுக்கு ;

(vii) இச்சட்டத்தின் 31 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவுக்கு ;

(viii) இச்சட்டத்தின் முறையே 32 மற்றும் 33 ஆம் பிரிவுகளினால் ஆறாம் அட்டவணைக்கும் ஏழாம் அட்டவணைக்கும் ;

செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1998, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(8) இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

**35.** இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.